**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 400/2024**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 14.10.2025.**

| | |
|---|---|
| **Name : பிரசாத்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed) (A4 present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்பொழுது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.07.2022 ம் தேதியன்று மதியம்12.20 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.ராஜா, வயது 35, த/பெ மாறப்பன் என்பவரை அவருடைய தந்தை மாறப்பன் என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 09.07.2022 –ம் தேதி இரவு 11 மணியளவில் அவரது வீட்டில் 4 அடையாளம் தெரிந்த ஆண் நபர்கள் கட்டை மற்றும் ஓடால் தாக்கி காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயம் இருந்தது.

1) 2 x 2 cm அளவுடைய கன்றிய காயம் மேலுதட்டில் இருந்தது.

2) 2 x 2 cm அளவுடைய கன்றிய காயம் இடது கண் பகுதியில் மேற்புறம் இருந்தது.

3) 2 x 2 cm அளவுடைய கன்றிய காயம் வலது கையில் இருந்தது.

3) அவர் சிகிச்சையின் போது காவல் துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. Police intimation **அ.சா.ஆ.7** ஆகும். மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம்

என சான்று வழங்கப்பட்டது. **மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.8.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) அ.சா.1 முதுகில் வலி இருப்பதாகவோ, காயம் இருப்பதாகவோ என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து தான் மருத்துவமனையில் சேர்ந்தார்கள் என்றால் 12 மணிநேரம் கழித்து சேர்ந்தார்கள். வேறு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்றதாக சொன்னாரா என்றால் இல்லை. இரு சக்கர வாகனத்தில் ஒரு நபர் கீழே விழும் போது மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது. சொந்த வாகனத்தில் தான் மருத்துவமனைக்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இரு சக்கர வாகனமா, நான்கு சக்கர வாகனமா என்று குறிப்பிடப்படவில்லை.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**